# மாகாணசபை தமிழர் பிரச்சினையை தீர்க்காது
# அரசினுல் வன்செயல்களை நிறுத்தவும் முடியாது

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 25-7-86 வெள்ளி (ஆடி 9 கலிக 17) முழக்கம் 171

## கூட்டணியினரிடம் ஸ்ரீமாவோ

அரசாங்கம் முன்வைத்திருக்கும் மாகாணசபைகள் யோசனை தமிழர் பிரச்சினையைத் தீர்க்க எந்த வகையிலும் உதவாது என்றும், இது மேலும் இனப் பிரச்சினையை அதிகரிக்க வழி கோலும் என்பதாலுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதனை நிராகரிப்பதென்று முடிவு எடுத்துள்ளதாக கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று தம்மைச் சந்தித்த கூட்டணித் தலைவர்களிடம் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை ரோஸ்மீட் பிளேஸிலுள்ள ஸ்ரீமாவோவின் இல்லத்தில் இடம்பெற்றது. திரு. அமிர்தலிங்கத்தின் தலைமையில் எட்டுப் பேர் கொண்ட கூட்டணிக் குழு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் ஸ்ரீமாவோவுடன் பேசியது. இந்த அரசாங்கத்தினுல் ஒரு போதும் வன்செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது எனவும் ஸ்ரீமாவோ குறிப்பிட்டார். "மாகாணசபை யோசனையை அரசாங்கம் நேர்மையாக நடைமுறைப்படுத்தும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கூட்டணியினரிடம் —6ம் பக்கம் பார்க்க

★ மாமடுவ மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களே அனேகமானேர்

# வவுனியா அனுராதபுர பஸ்ஸில் குண்டு வெடித்து 34 பேர் பலி

## காயமுற்ற 33 பேரில் மூவர் தமிழர்கள் பதினெரு பெண்களும் படுகாயமுற்றனர்

(வவுனியா)

வவுனியாவிலிருந்து நேற்று முற்பகல் அனுராதபுரம் நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றில் பார்ஸல் குண்டு வெடித்ததால் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை முப்பத்துநான்கு பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரணமானவர்களில் பெரும்பான்மையானவர்களும் சிங்களவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இருபத்தெட்டுப் பயணிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், மிகுதிப் பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் மாமடுவ என்ற இடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டுவிட்டு, தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றவர்களே அனேகமாக இந்த பஸ்ஸில் பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. மரணமானவர்களில் பலரும் மதவாச்சி, அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

மதவாச்சியிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இக் குண்டு வெடித்தது.

காயமடைந்த முப்பத்து மூன்று பேரில் பதினெரு பேர் பெண்களாவர். இவர்களில் ஒன்பது பேர் சிங்களப் பெண்கள். ஒருவர் முஸ்லிம் பெண்மணி.

காயமுற்ற இருபத்திரண்டு ஆண்களில் பதினேழு பேர் சிங்களவர். இருவர் முஸ்லிம்கள். மூவர் தமிழர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமுற்ற மூன்று தமிழர்கள் சுந்தரலிங்கம், சதாசிவம், சுப்பிரமணியம் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

### மாமடுவவில் 37 பேர் மரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை மாமடுவவில் இடம்பெற்ற கண்ணிவெடி பஸ் தாக்குதலில் மரணமானவர்கள் தொகை முப்பத்தேழாக அதிகரித்துள்ளது.

## தொண்டமான் டில்லி பயணம்; ராஜீவை சந்தித்துப் பேசுவார்

(சென்னை)

இனப்பிரச்சினை தொடர்பாக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமைச்சர் தொண்டமான் நேற்று மாலை சென்னையிலிருந்து புதுடில்லி பயணமானுர்.

பிரதமர் ராஜீவ் காந்தியை இன்று மாலை சந்திக்க விருப்பதாக அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

பாரத கொள்கை ஆலோசனைக் குழுத்தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலர் திரு. பி. வெங்கடேஸ்வரன் உட்பட பல முக்கிய அதிகாரிகளையும் தாம் சந்தித் —6 ஆம் பக்கம் பார்க்க

அரசாங்க அறிவிப்பு:

## தமிழர் கூட்டணிக் குழுவினர் நடு ஆகஸ்டில் மீண்டும் வருவர்

தமிழர் விடுதலைக்கூட்டணிக் குழுவினர் ஆகஸ்ட் மாத நடுப் பகுதியில் மீண்டும் கொழும்பு வருவார்கள் என்றும், அவர்களுடன் அரசாங்கம் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்துமென்றும் அரசியல் கட்சிகள் மாநாட்டுச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 13ம் திகதிமுதல் 23ம் திகதிவரை பலதடவை கூட்டணிக்கும் அரசாங்கத்துக் —6ஆம் பக்கம் பார்க்க

## எர்ஷாட்டுக்கு வரவேற்பு

பங்களாதேஷ் ஜனுதிபதி லெப்டினன்ற் ஜெனரல் முஹமத் எர்ஷாட் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்தார்.

அவருக்கு கொழும்பில் நேற்று செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது நேற்று மாலை ஜனுதிபதி ஜெயவர்த்தனுவுடன் பேச்சு நடாத்தினுர், இன்று கண்டிக்கு விஜயம் செய்வார்.

## கடையில் நடந்த கொள்ளை; உரிமையாளருக்குச் சூடு!

யாழ். தட்டாதெருச் சந்தியிலுள்ள மதுபான விற்பனைக் கடையொன்றில் இனந்தெரி —6ஆம் பக்கம் பார்க்க

இன்று ஹர்த்தாலும்

## படுகொலைகள் எதிர்ப்பு தினமும்

1983 ஜூலையில் தமிழினத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவத்தையும், வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கொலைகளையும் நினைவு கூருமுகமாக தமிழ்ப் பகுதிகளில் இன்று பூரண ஹர்த்தாலும் எதிர்ப்புத்தினமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தொகுதிகளிலும் இன்று எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு 'தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு' ஏற்பாடு செய்துள்ளது.

இன்றைய ஹர்த்தால் எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு சகல அலுவலகங்கள், பாடசாலைகள், போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம் பெருது.

ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

## தியாகிகளின் நினைவாக யுத்தத்தைத் தொடருவோம்

"ஈழப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில்மாபெரும் பாய்ச்சலை ஏற்படுத்திய எதிரியின் மிருகத்தனமான ஒடுக்குமுறையின் சின்னமாய் அமைந்தது 83 ஜூலை இனப்படுகொலை. கழிந்து விட்ட மூன்று ஆண்டுகளிலும் எதிரியின் யுத்த தந்திரங்கள் வளர்ச்சியடைந்து எமது மக்கள் மீது பாரிய சுமையேற்பட்டுவிட்டது."

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, "தேசத் தியாகிகளின் நினைவாக தேசிய யுத்தத்தைத் தொடருவோம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"பலாத்காரமான, பலவந்தமான ஒடுக்குமுறையிலிருந்து நம்மை விடுவித்துக் —6ஆம் பக்கம் பார்க்க

புளொட் அறிக்கை:

## எமது எதிர்ப்பை எதிரிக்கு தெரியப்படுத்துவோம்!

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) "வெலிக்கடை—கறுத்த ஜூலைப் படுகொலை நினைவாக..." வெளியிட்டுள்ள அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட இப் படுபயங்கரமான இன அழிப்பு நடவடிக்கையால் தனது கோரம் நிறைந்த முகத்தை வெளிக்காட்டியதுடன் மட்டு —6 ஆம் பக்கம் பார்க்க

## பொதிகள் மீது ஜாக்கிரதை பஸ் ஊழியருக்கு எச்சரிக்கை

அடுத்தடுத்து நடைபெற்ற பஸ் குண்டு வெடிப்பு சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டிலுள்ள போக்குவரத்துச்சபை பஸ் ஊழியர்கள் சாரதிகளை பஸ்களிலும், பஸ் நிலையங்களிலும் அநாதரவான நிலையில் காணப்படும் பொதிகள் மீது அவதானமாக இருக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

சந்தேகத்துக்கிடமான பார் —6ம் பக்கம் பார்க்க

### ஏ. ரி. பொன்னுத்துரை பேச்சு:

# பிழைகளை சுட்டிக்காட்டுதல் விமர்சகனின் கடமையாகும்

(அரியாலை)

“நல்ல கருப்பொருள் உள்ள நவீன நாடகமே வெறியாட்டாகும். இது ஒரு கள நாடகமாகும். தொடங்கி முடியும் வரை பூங்கா தான் அதன் களமாக உள்ளது. பாத்திரங்கள் அனைத்தும் குறியீடுகளாகும். பேச்சை விட அசைவுகளே அதிகமாகும் நாடகத்தை இரசிக்க இரசிகர்கள் நம்பி வருகிறார்கள். அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டும். இன்றைய நாட்களில் இரசிகர்கள் வளர்ந்து விட்டார்கள், வளர்ந்து வருகிறார்கள். இரசிகர்கள் மட்டுமன்றி நடிகர்களும், வளர்ச்சி அடைந்துள்ளார்கள். கலையும் வளர்ச்சி அடைந்துள்ளது. பிழை விடுவதை விமர்சர்கள் காட்டுவது கடமையாகும்”

இவ்வாறு நாடகக் கலைஞர் திரு ஏ. ரி. பொன்னுத்துரை கவிஞர் முருகையனின் நூல் வெளியீட்டிலும் நாடக விமர்சன அரங்கிலும், வெறியாட்டு நாடக விமர்சன உரை ஆற்றும் போது குறிப்பிட்டார். தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்திய இவ்வரங்கு நல்லூர் இந்து விடுதியில் திரு. க. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் இ. முருகையன் வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:-

‘விமர்சகர் என்றால் ஒரு படைப்பு எப்படிப்பட்டதென்பதை இனங்காட்டவேண்டியவர்களாக இருக்கவேண்டும். ஒரு நூலைப் படிப்பவர்கள் எல்லாரும் விமர்சகர்கள்தான். இலக்கியத்துறையை நன்கு படித்தவர்களை எடுத்துக் கூறினால் மற்றவர்கள் படிக்க இலகுவாக இருக்கும். இதுதான் விமர்சகனின் பங்காகும். விமர்சகனின் பணியால் படைப்பாளிகளுக்கும் நன்மை ஏற்படுவது உண்டு” என்றார்.

திரு. சோ. பத்மநாதன் (அது அவர்கள்) கவிதைத் தொகுதி விமர்சன உரையில் குறிப்பிட்டதாவது:-

“கவிதைப் பண்புகளைத் தூக்கி எறிந்துவிட்டுக் கவிதை படைக்கலாம் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. எந்த வடிவமும் இல்லை; எப்படியும் நாம் கவிதை செய்யலாம் என்பது ஆபத்தானதாகும். தமிழ்க் கவிதைக்குப் பல வடிவங்கள் இருக்கின்றபோதிலும் வெண்பாப் பாடுவது கஷ்டமாகும். திரு. முருகையன் அவர்கள் கஷ்டமான வெண்பா உாடகமாகக் கவிதை படைத்துள்ளார்’ என்றார்.

திரு. என். இரவீந்திரன் (வெறியாட்டு பாட்டுக்கூத்து) விமர்சன உரையில், “நூலகம் எரிந்துதான் வெறியாட்டு உருவாகியதற்குக் காரணமாகும். எங்கள் சோக நிகழ்வுகளுக்கான அடிப்படைக் காரணத்தை வெறியாட்டுக் கூறுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்பதையும் நாடகம் காட்டுகிறது என்றார்.

இவ்வரங்கில் வெறியாட்டு நூலின் முதற்பிரதியைச் சட்டத்தரணி சோ. தேவராசா வழங்க கல்வயல் வே. குமாரசாமி பெற்றுக்கொண்டார். அது அவர்கள் நூலின் பிரதியைத் திரு. தேவராசா வழங்க ஆர். செல்வநாயகம் பெற்றுக் கொண்டார். திரு. சோ. தேவராசா நன்றியுரை ஆற்றினர்.

## வரி விளம்பரம்

### றேனியோ

தரமான றேனியோ தட்டெழுத்து அச்சுவேலைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். B/ 1423

## அறுவடை செய்யமுடியாது அவதி

(சரசாலை)

அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள வயல்களில் நெல்லை அறுவடை செய்ய முடியாதநிலை கிளிநொச்சியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள பகுதிகள் கணேசபுரம் பழைய கொலனி கரடிபோக்கு பகுதி வயல்கள் அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளது.

கடந்த காலபோக வேளாண்மையின்போது வயலில்வைத்து கமக்காரர்கள், தொழிலாளர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்த விடயமே. அதனையடுத்தேவிவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

# கிழக்கு அகதிகள் தினசரி வடமராட்சியில் தஞ்சம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் திருமலை மாவட்டத்திலிருந்து வரும் அகதிகள் தொகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றது.

தினமும் கிழக்கில் நிகழும் அரச வன்செயல்களினால் மக்கள் வடக்கு நோக்கியே வருகின்றனர். சுமார் 300 குடும்பங்கள் இப்பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இவர்களது நிவாரணங்கள் வந்து சேர காலதாமதமாகும் பட்சத்திலும் இவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை அவர்களது இருப்பு வசதிகளை வல்வை அகதிகள் புனர்வாழ்வுச் சபையினர் தாமே தமது நிதியத்திலிருந்து கவனித்து வருவதாகப் புனர்வாழ்வு சபை செயலர் திரு. என் துவிதாஸ் தெரிவித்துள்ளார்.

### கண்காட்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பாடசாலைகளின் கல்விக்கண்காட்சி நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நெடுந்தீவு தபாலதிபர் திரு. எஸ். சிவப்பிரகாசத்தால் திறந்துவைக்கப்பட்டது. விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி, தமிழ், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்கள் உட்படப் பல்வேறு பாடப்பிரிவுகளை உள்ளடக்கியதான இக் கண்காட்சியை ஆயிரக்கணக்கான பெற்றோரும், மாணவரும் கண்டு பயன்பெற்றனர். தீபகற்பத்தின் அனைத்துப் பாடசாலைகளினதும் திறமையை ஒருங்கே காண நெடுந்தீவு உப வட்டார ஆசிரிய சங்கம் சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தது.

## பிறந்தநாள் வாழ்த்து

⌘ கைதடி கணேசன் மகேஸ்வரி தம்பதியின் மகள் சாருபி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

⌘ நாவாந்துறை கடற்கரை வீதி அம்பிகைநாதன் தம்பதியின் மகள் அனுஷா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.


விசா வேலை ஒப்பந்தத்துடனான

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா: சவூதி கேற்றறிங் அனைத்து தரத்திலும் நகர நிர்மாண, பராமரிப்பு, கட்டிடத் துறை சார்ந்ததும், காரியாலய வேலைகள் சார்ந்ததுமான ஆட்களுக்கு பிரயாண ஒழுங்குகள்!

ஈருக்: பயணமாகிவிட்டனர், பயண ஒழுங்கில் இருக்கின்றனர். மேலும் புதியவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

**R. K. பரமசுவாமி (பவானி)**
ஆஸ்பத்திரி ஒழுங்கை
இணுவில் மேற்கு.

R/24100


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
4-9-1963

ஆண்டவன் அழிப்பு:
25-7-1983

யாழ் - அரியாலையூர்

### திரு. அழகராசா ராஜன்

யாழ். செயலகத்தில் கடமை ஆற்றிய போது விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு 1983 ஆடி மாதம் 25ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் அகால மரணமான எங்கள் அன்பு மகனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

நெடுங்குளம் றோட், அரியாலை.

தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரி.

R/24094


உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் வழங்கும் பரிசு

# அமிர்த கங்கை

பெரிய அளவு - புதிய அமைப்பு

மூவர்ண அட்டைப்படம்

★ ரமணி - பாலர் பகுதி அதிக பக்கங்களுடன்.
★ ஆடி மாத சோதிட இராசிபலன்.
★ சிறு கதைகள், கட்டுரைகள், தொடர்கதைகள்.

விலை ரூபா 5/- மட்டுமே.

அமிர்த கங்கை, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர்: ஆண் கூலியாட்களுக்கு உடனடி வேலைவாய்ப்புண்டு.

டுபாய்: ஆண் கூலியாட்கள்.

சவூதி: 25 வயதுக்கு மேற்பட்ட கூலியாட்களுக்கு OPEN VISA உடனடிப் பயண ஒழுங்கும்
:21 வயதுக்கு மேற்பட்டவர்கட்கு 2 வாரத்துக்குள் பயண ஒழுங்கும் செய்து கொடுக்கப்படும்.

டென்மார்க், கனடா செல்பவர்கட்கும் உடன் பயண ஒழுங்கு செய்யப்படும்.

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு வீட்டுப் பணிபெண்கள் வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

பாஸ்போர்ட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகிய வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**T. துரைசிங்கம்**
(மகளிர் கல்லூரிக்கு அருகாமை)
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் உடுவில்,
சுன்னாகம்.

R/24069

# அரச பயங்கரவாதம் ஆலயங்களை தீவைத்தும் தகர்த்தும் அழித்துவருகின்றது

## மறைமாவட்ட முதல்வர் மைக்கல்சாமி பேச்சு

(குருநகர்)

''ஒரு ஆலயம் நூற்று இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதென்பது சாமானியமானதன்று. இக்கால கட்டத்தில் எழுந்துள்ள அரச பயங்கரவாதத்தால் கோவில்கள் ஆயுதப்படையினரால் மதிக்கப்படாமல் உடைமைகள் சூறையாடப்பட்டும், கட்டடங்கள் தகர்க்கப்பட்டும், தீக்கிரை ஆக்கப்பட்டும் ஆலயங்கள் அழிக்கப்பட்டும் வருவதைக் கண்ணூடாகக்கண்டு வருகிறோம். இந்நிலைமையில் குருநகர் புனிதர் யாகப்பருடைய ஆலயமானது நூற்று இருபத்தைந்தாவது ஆண்டினைப் பூர்த்தி செய்வதை அனுபவிக்கிறோமென்றால் கத்தோலிக்கரான நாம் செய்த பெரும் பாக்கியம்தான்.''

குருநகர், புனிதர் யாகப்பர் ஆலய 125வது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிட்டு வைக்கப்பட்ட சிறப்பு மலரை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்திய மறைமாவட்ட முதல் குரவர் வண-பிதா மைக்கல்சாமி அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மலர் வெளியீட்டுக் குழுத் தலைவரும், பங்குத் தந்தையுமான வண-பிதா பீற்றர் துரைரட்ணம் தலைமை வகித்தார். வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிட்ஸ் முதல்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய மைக்கல்சாமி அடிகளார்: ''நூற்று இருபத்தைந்தாண்டுகள் நிறைவை வெறுமனே கொண்டாடாமல் அர்த்தமுள்ளதாக்க சிறப்பு மலரொன்றையும் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் பிரசுரித்திருக்கின்றனர். இந்நேரத்தில் இத்தகைய மலரொன்றை வெளியிடுவதென்பதே அரச சாதனைதான்'' என்றார்.

# கிராமிய அபிவிருத்திக்கு சுய முயற்சி திட்டம் தேவை

(சுண்டுக்குளி)

''கிராமிய மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தற்போதைய சூழ்நிலையில் கிராம அபிவிருத்தியைச் சுய முயற்சி மூலமே பெறமுடியும். சனசமூக நிலையங்களின்பணி இதில் முக்கியமானது. கிராமத்தினதும் கிராமிய மக்களின் மேம்பாட்டிற்காகவும் நாம் அதிக பங்களிப்பைச் செலுத்த வேண்டும். சனசமூக நிலையங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே இதனைச் சாதிக்கலாம். சனசமூக நிலைய சமாசங்கள் எதற்காக உருவாக்கப்பட்டனவோ அதனைச் சாதிப்பதன் மூலமே பொதுமக்கள் அதிக நன்மைகளைப் பெறமுடியும்''

இவ்வாறு குடத்தனை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகப் பகுதிச் சனசமூக நிலையங்களின் சமாஜத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி செ. கணேசன் குறிப்பிட்டார்.

குடத்தனை அபிவிருத்திச் சபை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. தர்மகுலசிங்கம் உட்பட வேறுபலரும் பேசினர். பின்வருவோர் சமாஜ நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:- தலைவர்-திரு கா. நாகமுத்து, உப தலைவர்-திரு. வே. குமாரசாமி, செயலாளர் திரு. ந. பத்மநாதன், உப செயலாளர் திரு. பெ. பூபாலசிங்கம், பொருளாளர் - திரு. வே. அம்பலவாணீசன், செயற்குழு உறுப்பினர்கள் - திருவாளர்கள் மு. சிவஞானசுந்தரம், சி. செல்வலிங்கம், அ. அன்ரன் சி. சற்குணராஜா.

# கிறிஸ்தவ ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

(நல்லூர்)

இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் ஒன்றியத்தின் யாழ். கிளையின் வருடாந்தக் கூட்டம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் சங்கத் தலைவி திரு. எல். பி. ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எல். பி. ஜெயவீரசிங்கமும், உப தலைவர்களாக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. இராசன் கதிர்காமரும், யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. ரி. குணசீலனும், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையாவும், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. டேவிட்டும், வேம்படி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி ஏ. தம்பிராசாவும், பொதுச் செயலாளராகவும், பொருளாளராகவும் திரு. எஸ். டி. பொன்னையாவும், உப செயலாளராக திருமதி ரி. பரமபதியும், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி வீ. ஏ. செல்லையா, திருமதிகள் அருள்ராசா, றிச்சேட், தேவானந்தம், திருவாளர்கள் எஸ். பி. ஜீவானந்தம், யே. போல் ஆகியோர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# கண்காட்சி மாணவரின் திறனை வெளிப்படுத்தும்

(சுன்னாகம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சியைக் கோப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ஏ.வி. தங்கராசா நாடாவை வெட்டியும், மங்கல விளக்கேற்றியும் திறந்துவைத்தார்.

அங்கு அவர் உரையாற்றியபோது, ஒரு பாடசாலைக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் அடிப்படையிலும் குறைவான வசதிகளைக் கொண்ட இப் பாடசாலை மிகச் சிறந்த முறையில் இக் கண்காட்சியை ஒழுங்குசெய்ததைப் பாராட்ட வேண்டும். பாடசாலைக் கட்டடப் பற்றுக்குறை நிலவுகின்றபோதிலும், அதிபர், ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பின் மூலம் இப்பாடசாலை வளர்ந்து வருகின்றது. செயற்திறன் மிக்க மாணவர்கள் உருவாவதை இக் கண்காட்சி புலப்படுத்துகிறது'' என்றார். அதிபர் திரு. ஏ. குமரகுரு வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

பெருந்திரளான மாணவர்களும் பெற்றோரும் பார்வையிட்டுச்சென்றதுடன் மாவட்டப் போட்டிக்குத் தகுதியான பொருட்களைத் தெரிந்தெடுப்பதிலும் தெரிவுக் குழுவினர் ஈடுபட்டனர்.

## கல்விப் பணிப்பாளர் உரை:

# மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியே பலமான அத்திபாரமாகும்

(உடுவில்)

பலமான கட்டிடமாக அமைப்பதற்கு அத்திபாரம் எவ்வளவு பலமானதாக அமைக்கப்படவேண்டுமோ அதைப்போலவே மாணவர்கள் வீரன், ஆய்வாளன், கலைஞன் என பிற்காலத்தில் வருவதற்கு ஆரம்பத்தில் ஊட்டப்படும் கல்வியும் அவசியமாகும். பழமை வாய்ந்த இக்கல்லூரிக்கு சொந்தமாக ஒரு மைதானம் இல்லாத போதிலும் இரவல் காணிபெற்று அதை அபிவிருத்தி செய்து விளையாட்டுப் போட்டி நடத்துவதிலிருந்து இக் கல்லூரி மாணவர்களிடையேயுள்ள ஊக்கமும், உற்சாகமும் எப்படிப்பட்டதெனத் தெரிகின்றது. தொடர்ந்தும் விளையாட்டுப் போட்டிகளை இம்மைதானத்தில் நடாத்துவதற்கு இக் காணி உரிமையாளர்கள் அனுமதி அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. ச சண்முகலிங்கம் தலைமை வகித்து உரையாற்றுகையில்:- பாடசாலை ஸ்தாபகராகிய சுப்பிரமணியத்தின் நினைவாக அவரது பெயரை சூட்டுவதற்கு அனுமதி வழங்குமாறும், பாடசாலைக் கிணற்றை துப்புரவு செய்து தருவதோடு மேலும் ஒரு ஆண் உதவி ஆசிரியரை தந்து உதவுமாறும்பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்து மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், திரு. க. அருணசலம் (விக்ரோறியாக் கல்லூரி அதிபர்) திரு. பொ. பூபாலசிங்கம் (இடைக்காடு ம. வி. அதிபர்), திரு வி. எஸ். சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். மார்க்கண்டன் இல்லம் முதலாமிடத்தையும், வைத்திலிங்கம் இல்லம் இரண்டாமிடத்தையும், சுப்பிரமணியம் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

## கட்டைவேலி-நெல்லியடி

# கூட்டுறவுச் சங்கத்தின் திரைப்பட அறிமுக முயற்சி

(கரவெட்டி)

'இன்று தமிழ்த்திரைப் படங்கள் தொழில் நுட்பரீதியாகவும் கலாபூர்வமாகவும் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளன என்பதை அறிவதற்கு நாம் மக்கள் மத்தியில் தரமான திரைப்படங்களை அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். சிங்களத்தில் தரமான படங்களைத் தயாரிக்கும் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் பத்து அல்லது பதினைந்து வருடங்களின் முன்னர் தமிழ்க் கலாசாரத்தை முழுமையாகத் தரிசிக்கக்கூடிய படங்களைத் தமிழ் மொழியில் தாம் பார்க்க முடிவதில்லை என்று குறைப்பட்டார். இன்று நிலைமை மாறிவிட்டது கொழும்பில் நடைபெறும் இந்திய பட விழாவில் 'தண்ணீர் தண்ணீர்' காண்பிக்கப்பட்டது. இன்று நாம் ருத்ரய்யாவின் 'அவள் அப்படித்தான்' என்ற படத்தை உங்களுக்கு அறிமுகப் படுத்துகின்றோம்.'

இவ்வாறு கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் திரைப்பட ரசிகர் வட்டம் ஏற்பாடு செய்திருந்த 'அவள் அப்படித்தான்' படக்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய குப்பிழான் ஐ. சண்முகன் தெரிவித்தார்.

திரைப்படம் முடிந்ததும் அது பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் திரு. நெல்லை க. பேரன் பேசுகையில், 'வண்ணநிலவனின் வசனங்கள் மிகவும் கருத்தோடு சிந்திக்க வைக்கின்றன. முற்றிலும் வித்தியாசமான இப்படம் தரமான ரசிகர்களை நிச்சயம் கவரும்' என்றார். திரு க. சிதம்பரப்பிள்ளை (யதார்த்தன்) பேசுகையில் 'அவள் அப்படித்தான் கதையம்சம் மிகவும் பூர்சுவாத்தனமானது. நடிகர்கள் இயல்பாகச் செய்யவில்லை. நடிக்கிறார்கள்' என்றார். திரு. ச. முருகானந்தன் பேசுகையில் 'தனிப்பட்ட மனமாற்றங்கள் வரும் போதுதான் சூழலும் மாறும். நல்ல திரைப்படங்கள் ரசிகர்களைச் சென்றடைய வேண்டுமானால் ஓரளவு ஜனரஞ்சகத் தன்மையும் தேவை' என்றார். திரு செ. யோகராசா பேசுகையில் 'பாலசந்தரின் அரங்கேற்றம், நூல்வேலி, அக்கினி சாட்சி போன்ற பெண் கதாபாத்திரங்களை முதன்மைப்படுத்தும் படங்களுடன் இதை ஒப்பிடலாமா? வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்கள் தான் பெண் விடுதலை பற்றிப் பேசுவார்களா? என்ற சந்தேகங்களைக் கிளப்பினர்.

திரு. எஸ். வன்னியகுலம் பேசுகையில். ''கீழைத்தேய மக்களின் பண்பாட்டுக் குறியீடுகளே இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது முற்போக்கான சிந்தனையுள்ள பெண்ணுக்கும் வாழ்க்கைத் துணை தேவை என்பது முக்கியமாகக் காட்டப்பட்டுள்ளது'' என்றார்

திரு. தெணியான் பேசுகையில், ''படத்தின்படி கதாநாயகியின் எதிர்காலம் பற்றிய கேள்வி எழுகிறது. படம் உரிய இலக்கை அடையவில்லை'' என்றார்.

திரு. த. கலாமணி பேசுகையில், ''கதையம்சம் என்பதைவிட கமராவின் அசைவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வித்தியாசமாகவும் உள்ளன. நடிப்பும் மிக இயல்பாக உள்ளது'' என்றார்.

சங்கத்தினதும் கலாசாரப் பெருமன்றத்தினதும் தலைவர் திரு எஸ். சிதம்பரப்பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறினார்.

# நோயாளர் நலன் கவனிக்க சங்கங்கள் அவசியமாகும்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் நோயாளர் நலன்புரிச்சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். கே. லலித்குமார் தலைமையில் வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

நோயாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கி நோயாளர்களை நோய்களிலிருந்து பாதுகாப்பதும், அவர்களைச் சுகதேகிகளாக வாழவழிவகுப்பதுமே வைத்தியசாலைகளின் முக்கிய கடமைகளாகும். இந் நிலையிலே வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளிகளின் நலன்களைக்கவனிக்கவும், அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கும் நோயாளர் நலன் புரிச்சங்கங்கள்மிக இன்றியமையாதனவாக இருக்கின்றன. இந்நோயாளர் நலன்புரிச் சங்கம் சிறப்பாக இயங்கி நோயாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க வேண்டும்'' என்று தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இவ்வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க போஷகராக மகப் பேறு வைத்திய நிபுணர் டாக்டர் ஆர். குழந்தைவடிவேலு (பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி) வும், தலைவராக டாக்டர் கே. லலிதகுமாரும் (பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி) உப தலைவராக திரு ஏ. என். எஸ். திருச்செல்வமும் (யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப- அலுவலக நூலகப் பொறுப்பதிகாரி) செயலாளராக திரு. எஸ். வாமதேவனும் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), பொருளாளராக திரு. என். குணசீலனும் (ஹட்லிக்கல்லூரி ஆசிரியர்) செயற்குழு உறுப்பினர்களாக செல்வி என். தேன்மதி, திரு. வி. விஜயராஜ், செல்வி ரீ. ஈஸ்வரி திரு. பாஸ்கர், பரமலிங்கம், செல்வி ஐ. பத்மாவும், கணக்குப்பரிசோதகராக திரு. ஆர். சிவபாதசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளுக்கு வேண்டிய தகவல்களை வழங்குவதற்காக தகவல் நிலையமொன்றை அமைப்பதெனவும், வெளி நோயாளர்கள், பார்வையாளர்களின் நன்மை கருதி வெளி நோயாளர், பார்வையாளர் விடுதி ஒன்றை அமைப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உதய சிந்தனை

எதனையும் உண்மைக்காக இழக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கலாகாது. —காந்தி அடிகள்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 22437

இதய ஒலி

25-7-86 வெள்ளிக்கிழமை (அக்ஷய) ஆடி 9

# சும்மா சொல்லக்கூடாது; விஜே சிறந்த நடிகர் தான்!

மிகப் பிரபல்யமான சிங்களத் திரைப்பட நடிகராக விஜய குமாரணதுங்க கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டார்.

வார இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற சிங்களத் திரைப்பட விழாவின்போது இத்தெரிவும், பரிசளிப்பும் இடம்பெற்றன.

சிங்கள சினிமா ரசிகர்களின் வாக்குகளை அடிப்படையாக வைத்து இந்தத் தெரிவு நடைபெற்றது.

மிகப் பிரபல்யமான சிங்களத் திரைப்பட நடிகராக (MOST POPULAR ACTOR) தெரிவாகியுள்ள திரு விஜயகுமாரணதுங்க அவர்கள், தற்போது இலங்கை அரசியலில், முக்கியமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் "சமாதானப் புறு"வாக பறந்து திரிந்து பிரபல்யமடைந்துவரும் ஒருவர் என்பதால், அவரது தெரிவும், பரிசும் இப்போது முக்கியமான ஒன்றுகக் கணிக்கப்பட வேண்டியுள்ளது.

தமிழகத்திலும், ஆந்திராவிலும் சினிமா நடிகர்கள் முதலமைச்சர்களாகப் பதவி வகிப்பதால் ஏற்பட்ட ஆசை சிலவேளை நடிகர் விஜயகுமாரணதுங்காவையும் அரசியலுக்குள் கொண்டு வந்திருக்கலாம்.

அரசியலில் மிகப் பிரபல்யமான பண்டாரநாயக்கா குடும்பத்தில் பெண் எடுத்ததால் கட்டான தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் அதிர்ஷ்டம் 'விஜே'க்குக் கிடைத்தது.

அந்த அதிர்ஷ்டம் 'அபேட்சகர்' என்ற பெயருடன் போய் விட்டது.

மாமியார் ஸ்ரீமாவோவினாலும், மைத்துனர் அனுராவினாலும் தூக்கி வீசப்பட்டதால் ஏற்பட்ட கடுஞ்சினம், ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை ஸ்தாபிக்க வேண்டிய தேவையை அவருக்குஏற்படுத்திற்று.

மிகப் பிரபலமான நடிகர் ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாகலாமென்றால், இந்நாட்டின் முதற் பிரஜையாகவும் ஒரு நடிகன் வரமுடியாதா என்ற எண்ணம் 'விஜே'க்கு ஏற்பட்டிருக்கலாம்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசியலில் குதித்த மற்றொரு சிங்கள நடிகரான காமினி பொன்சேகா, சில வருடங்களின் பின்னர் அரசியலிலிருந்து துறவறம் பூண்டதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வருடம் அதே காமினி பொன்சேகா மிகச்சிறந்த சிங்கள நடிகராக (BEST ACTOR) தெரிவு செய்யப்பட்டுள்ளமையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நடிகன் நாடாளக்கூடாது என்று எவரும் சொல்லவில்லை. ஆனால் அரசியலில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தூரப்பார்வையுள்ளவர்களாகவும், பரந்த இலட்சியமுடையவர்களாகவும், திடசிந்தை, செயற்றிறன், தலைமைத்துவப் பண்பு ஆகியவைகளைத் தன்னகத்தே கொண்டவர்களாகவும் இருந்தால் மட்டுமே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

'குறுகியபார்வை' அரசியலில் நீண்ட ஆயுளைக் கொடுக்காது.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும்; அவர்கள் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்றெல்லாம் கூறிவந்தவர் விஜயகுமாரணதுங்க.

தமிழ் நாட்டுக்கு இரு தடவைகள் சென்று போராளிகள் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியவர்.

டில்லி சென்று திருவாளர்கள் ஜி. பார்த்தசாரதி, பி. வெங்கடேஸ்வரன் ஆகியோருடன் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை வெற்றிகரமாக நடத்தியவர் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை ஓரளவுக்குப் புரிந்து கொண்டவர் என்று தமிழ் மக்கள் எண்ணத்தலைப்பட்ட வேளையில் "நானும் சிங்களவன் தான்" என்று விஜயகுமாரணதுங்கா தமது "மேக்கப்"பைக் கலைத்துவிட்டு உண்மையான வேஷத்தைக் காட்டிவிட்டார்.

"தமிழையும் அரசகரும மொழியாக்க வேண்டும்" என்று அரசியல் கட்சிகள் மாநாட்டில் உபகுழு சிபார்சு செய்தபோது அதனை எதிர்த்தவர் விஜயகுமாரணதுங்கா மட்டுமே தான்.

தனிச்சிங்களச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய மாமனார் பண்டாரநாயக்காவின் வழியில் நின்று, சிங்கள மக்களிடையே பிரபல அரசியல் வாதியாக மாறத்துடிக்கும் 'விஜே'யின் சுயரூபத்தை தமிழர்கள் இனம் கண்டுவிட்டனர்.

இந்த வகையில் அரசியல் கட்சிகள் மாநாட்டுக்கு தமிழ் பேசும் மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள.


"ஈழத்து அரசியலில் மிகப் பிரபல்யமான நடிகனாக" மாறவிருந்த 'விஜே'யின் முகமூடி கிழிக்கப்பட்டு விட்டது என்றே நாம நினைக்கிறோம்.

சும்மா சொல்லக்கூடாது, சிங்கள சினிமா ரசிகர்களின் தெரிவு. நூற்றுக்கு நூறு சரியானதே.

விஜயகுமாரணதுங்க சிங்கள மக்களின் மிகப் பிரபல்யமான நடிகரே தான்!

★ சிறப்புக் கட்டுரை

# 125 - வது ஆண்டு நிறைவில் புனித யாகப்பர் ஆலயம்



கடல் அலைகள் கொஞ்சும் யாழ் குருநகர் புனித யாகப்பர் (சந்தியோகுமையோர்) தேவாலய 125 வது ஆண்டு நினைவு விழா இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது. சரித்திரப் புகழ் வாய்ந்த இப் பிரமாண்டமான ஆலயம் 1861 ஆடி 25ல் அன்றைய பங்குக்குரவர் வண. பிதா மொறு ஆ அடிகளால் அத்திவாரமிடப்பட்டது. பின்னர் படிப்படியாக இன்றுள்ள ஆலயமாக வளர்ந்தது.

1624ல் போர்த்துக்கீசர் ஆட்சியில் இந்த ஆலயம் உள்ள இடத்தில் ஒரு சிற்றாலயம் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அன்றில் இருந்து இன்றைய பங்குக்குரவர் வண. பிதா பீற்றர் துரைரட்ணம் அடிகள் வரை இவ்வாலய வளர்ச்சிக்கு இங்கிருந்த குருமார் அளப்பரிய சேவைகள் ஆற்றியதை எவரும் மறுக்க முடியாது.

கடற்றொழிலை தமது சீவியத் தொழிலாக கொண்ட இப் பகுதி மக்கள் கிறீஸ்துவின் சீடர்களில் ஒருவரும் மீன்பிடித் தொழில் செய்தவருமான புனித யாகப்பரை தமது பாதுகாவலராக தெரிந்து எடுத்தனர். எனவே தொழிலுக்கும் தமக்கும் பாதுகாவலரான இப்புனிதரின் பெயரில் இப்பிரமாண்டமான ஆலயத்தை அமைத்து வழிபடுகின்றனர்.

இந்தஆலய சகல வேலைகளுக்கும் உரிய செலவுகளை கடைசி சதம்வரையும் இப்பங்கு மக்களே கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் தமது உடன் பிறப்புகளை இழந்தும், தங்களின் சொந்த தொழிலையே செய்யமுடியாது அவதியுறும் இப்பகுதி மக்கள் தமது பாதுகாவலரான புனித யாகப்பரின் துணைகொண்டு இன்னல்களை மறந்து வாழ இறைவன் அருள்புரியவேண்டுமென இப்பெருவிழா நோம் நாமும் அவர்களுடன் இணைந்து இறைவனை இறைஞ்சுவோம்.

பல கலையம்சங்களை உள்ளடக்கிய தற்போதைய சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான வரைபடத்தை தாமே வரைந்து அதற்கான அத்திவாரக் கல்லை 1861-ம் ஆண்டு ஆடி 25-ம் திகதி (இப்புனிதரின் திருநாளன்று) நாட்டியவர் பிரான்ஸ் தேசத்தை சேர்ந்தவரும் அக்காலத்தில் இவ்வாலயத்தில் கட்டளைக் குரவராய் திகழ்ந்தவருமான அதி வண. பிதா எல். சி. எச். மொறு ஆ, அ. ம. தி. அடிகளாவர்.

இவரின் நேரடி கண்காணிப்பில் இப்பங்கினைச் சேர்ந்தவரும் தமது சொந்த முயற்சியால் அனுபவத்தின் மூலம் கற்றுத் தேர்ந்தவருமான சிற்பாசிரியரும் மேஸ்திரியுமான சந்தியோ அவர்களின் மேற்பார்வையில் இவ்வாலயம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, சிறப்புறச் செய்து முடிக்கப்பட்டது. இவ்வாலயத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் தூபி (டோம்) மாடம் மேஸ்திரி சந்தியோ அவர்களின் கைத்திறனுக்கு சான்றாக விளங்குகிறது.

25-7-1861-ல் அத்திவாரக் கல் நாட்டப்பட்ட இத் தேவாலயம் சுவாமியவர்களின் கண்காணிப்பிலும், மேஸ்திரி சந்தியாகோ அவர்களின் வேலைத் திறமை மிக்க மேற்பார்வையிலும், இப்பங்கு மக்கள் கொடுத்த பேராதரவிலும் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டது.

இவ்வாலயமானது வடக்கே பிரதான வீதியாலும், மேற்கே சென். ஜேம்ஸ் மேற்கு வீதியாலும், தெற்கே பாங்ஷால் வீதியாலும் கிழக்கே 6ம் குறுக்குத் தெருவினாலும் சூழப்பட்டுள்ளது. இது பிரதான வீதியை நோக்கிய வண்ணம் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

**ம. றூபன்**

ஆலயத்தின் நீளம் 232அடி; அகலம் 58 அடி; தூபி (டோம்) மாடத்தின் உயரம் 81 அடி; முகப்பின் உயரம் 58 அடி; ஆலயத்தை சுற்றி தாழ்வாரமும் விறுந்தையும் அதனைச் சுற்றி ஆறுபடிகளும் இருக்கின்றன.

ஆலயத்தின் முகப்பில் அழகான போட்டிக்கோவும் இரு மருங்கிலும் இரு சிறிய தூபி (டோம்) மாடங்களைக் கொண்ட மணிக்கூட்டுக் கோபுரங்களும் ஆலயத்திற்கு மேலும் அழகைக் கொடுக்கின்றன. ஆலயத்தின்உச்சியிலுள்ள தூபி மாடம் றோமிலுள்ள புனித பேதுருவானவர் மகா தேவாலயத்தூபி மாடத்தைப் போன்ற தோற்றத்தை உடையதாயிருக்கின்றது.

இதன் உள்ளும் புறமும் பல சிற்ப வேலைப்பாடுகள் பொதிந்து காட்சியளிக்கின்றன. தூபிமாடத்தின் உச்சியிலே மனுக்குல மீட்சியின் சின்னமான திருச்சிலுவை விண்ணை நோக்கியவண்ணம் காட்சியளிக்கின்றது. தூபிமாடத்தின் உச்சியிலே நின்று பார்த்தால் யாழ்நகரின் இயற்கை எழிலை எளிதில் கண்டு நுகரக்கூடியதாகவிருக்கின்றது. தூபிமாடத்தின் பின்னும் இருபக்க முக்கோணங்களிலும் சுருபங்கள் அமைக்கப்பட்டிருக்கும் முறை அனைவரையும் கவரக் கூடியதாகவுள்ளது.

இங்கே முன்பாக அழகிய இருதூண்கள், தூண்களுக்கு முட்டுக்கொடுப்பதைப் போல இருக்கும் இரும்புக் கிறுதி, அதற்குமேல் போட்டிக்கோ, போட்டிக்கோவுக்கு கட்டியங் கூறுவதுபோல காட்சியளிக்கும் இரு மணிக்கூட்டு கோபுரங்கள், இவற்றிற்கு மெருகூட்டுவனபோல் இயற்கை அழகைக் கொடுக்கும் ஆலயமைதானம், ஆலயத்தைச் சுற்றிவர உள்ள அழகான வெளிகள் ஆலயத்தின்சிறப்பை எடுத்துக்காட்டுவனபோல் விளங்குகின்றன.

(இக்கட்டுரையில் வரும் தகவல்கள் சில இவ்வாலய125வது ஆண்டுமலரில் இருந்துஎடுக்கப் பட்டவையாகும்.)

## செந்தமிழர் செத்த தினம் இன்று

ஐயோ அநியாயம் ஆடிப் படுகொலைகள்
செய்தாரே "சி" ஞக்கள் செந்தமிழை - உய்வாரோ
உலகத் தமிழினமே உணர்வோடு எழுந்திடுங்கள்
கலகம் செய் காடையரைக் காண்.

ஆடியிலே நடந்த கொலை தேடி நடத்தியவர்
மூடி மறைக்கின்றார்கள் முட்டாள்கள் - கூடிடுவோம்
கொலை வெறியின் கொடுமை களைந்திடவே புவியில்
சிலை எடுத்து வாழ்ந்திடுவோம் சினந்து.

ஆண்டாண்டு படுகொலைகள் ஆடியிலே நடக்கு
தையா
வேண்டாம் கொலைகளினி விட்டிடுங்கோ - மூன்றாண்டு
வந்ததையா வஞ்சகத்தால் சிறைதனிலே
செந்தமிழர் செத்ததினம் இன்று.

ஆவூர்க் குமரன்
நெடுந்திவு.

## 27ம் திகதி கூட்டம்

(புலோலி)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் வித்தியாலய அதிபர் திரு என். ஆனந்தராஜ் தலைமையில் இம் மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது.

## பண்ணிசை போட்டி

(சுழிபுரம்)

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்திருந்த பண்ணிசைப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மத்திய பிரிவில் ஆண்கள் குழு முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. அதிமேற்பிரிவில் இக்கல்லூரியின் மாணவி செல்வி எஸ். பரமேஸ்வரி இரண்டாமிடம் பெற்றார்.

## இடம்பெயர்ந்த க. பொ. த.

# உயர்தர பரீட்சை எடுப்போர் கவனத்துக்கு...

வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து எதிர்வரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கும் பரீட்சார்த்திகளின் திரிசங்கு சொர்க்கநிலை பற்றி பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கவனத்திற்குக் கொண்டுவந்தது. தொடர்ந்து அவரை நேற்று முன்தினம் பருத்தித்துறை மத்தியபிரஜைகள் குழு பேட்டிகண்டு இந்தப் பரீட்சார்த்திகள் நிலை பற்றி ஆராய்ந்தது. அதன்பின் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஒரு விசேட பரீட்சை மண்டபம் ஒழுங்கு செய்யப்படும் இங்கு பாடசாலை பரீட்சார்த்திகளும், பிரத்தியேகப் பரீட்சார்த்திகளும் பரீட்சை எழுதலாம். இவர்கள் பரீட்சை ஆணையாளரால் வழங்கப்பெற்ற அனுமதி அட்டை அல்லது தற் சமயம் பயிலும் கல்விக்கூட அதிபரின் கடிதம் கொண்டு சென்றாலே பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர். அனுமதி அட்டையோ அன்றி கல்விக்கூட அதிபரின் கடிதமோ இன்றிச் செல்பவர்களும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் அனுமதி அட்டையோ அன்றி அதிபரின் கடிதமோ சமர்ப்பிக்கப் படாதவரையில் அவர்கள் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டா.

இத்தகைய மாணவர்கள் பொதுவான பாடங்களையே இங்கு எடுப்பது சாத்தியமாகலாம். உதாரணமாக சமஸ்கிருதம் போன்ற சிறப்புப் பாடங்களை எடுப்பது சாத்தியப்படாமல் போகலாம்.

இந்த வெளிமாவட்டங்கள் என்ற பிரிவில் கிளிநொச்சி அடங்காது. கிளிநொச்சிப் பரீடசார்த்திகளுக்கு பளையில் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை மாணவரா பிரத்தியேக மாணவரா என்பதைத் தெளிவாக தங்கள் விண்ணப்பத்தில்எழுத வேண்டும். யாழ்- கல்விப் பணிப்பாளருக்கு ஒரு விண்ணப்பம் எழுதி எங்கிருந்து ஏன் இடம்பெயர்ந்தார் என்பதை தெரிவித்து, தான் எடுக்கும் பாடங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும். அத்துடன் தன் வசம் அனுமதி அட்டை/கல்விக்கூட அதிபர் கடிதம் உண்டா என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். தங்கள் தற்போதைய முகவரியும் தெளிவாக எழுதப்படல் வேண்டும்

இந்த விண்ணப்பங்களை தாம் இப்போ வாழும் பகுதி பிரஜைகள் குழுக்களிடம் இம்மாதம் 27ம்திகதி காலை 10.00 மணிக்கு முன்பு ஒப்படைக்க வேண்டும். எல்லா விண்ணப்பங்களையும் பட்டியலிட்டுத் தொகுத்து பிரஜைகள் குழுக்கள் 28ம்திகதி பகல் 12.00 மணிக்கு முன்பு யாழ்- கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைப்பார்கள்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தூதுக்குழுவில் தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம், துணைத் தலைவர் வே. ச. தேவதாசன், துணைச்செயலாளர் இ. விஜயரத்தினம் ஆகியோர் இடம்பெற்றனர். இந்த விஷயத்தில் பூரண ஒத்துழைப்புத் தந்து ஒத்துழைக்கும்படி எல்லா பிரஜைகள் குழுக்களையும், யாழ்- கல்விப் பணிப்பாளர் வேண்டுகின்றார்.

## தங்குமடம் அவசிய தேவையாகிறது

(வேலணை)

தீவுப்பகுதி மக்கள் பிரயாணம் செய்து வரும் அராலித் துறைப்பகுதியில் மாரி காலத்தில் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கான தங்குமடங்கள் இல்லாத காரணத்தினால் இக்காலத்தில் மழையினால் இப்பிரயாணிகள் பெருங் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலையுள்ளது.

அடுத்த சில மாதங்களில் மழை காலம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கிடையில் பிரயாணிகள் தங்குவதற்கான மண்டபமொன்றை அமைக்க முன்வருமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் பொதுநிறுவனங்கள் சமூக சேவை அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள், தனியார் வாகன சொந்தக்காரர்கள், அவர்களது சங்கத்தினர், மற்றும் நலன் விரும்பிகளை மிகவும் அவசரமாக கேட்டுள்ளார்.

மேற்படி அராலித்துறையில் மண்டபம் அமைக்கப்படாவிட்டால் பிரயாணிகள் மழையில் நனைய வேண்டிய அவலநிலை ஏற்படும் என்றும் உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னணியில் விக்டோரியா

(சுழிபுரம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டப்போட்டிகளில்சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்டோர் குழு தொடர்ந்து முன்னணியில் நிற்கிறது.

யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இப்போட்டிகளில் சுழிபுரம் விக்ரோறியா, இதுவரை வட்டுக்கோட்டை இந்து, அராலி சரஸ்வதி, காரைநகர் இந்து, தெல்லிப்பழை மகாஜன ஆகிய பாடசாலைகளை வென்று அரையிறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியினைப்பெற்றுள்ளது.

இதன்படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை அல்லது யாழ். புனித. சாள்ஸ் மகாவித்தியாலயத்தை அரையிறுதிப் போட்டியில் விக்ரோறியா சந்திக்கும்.

## சுற்றுப்போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி ரீதியிலான ஆண், பெண் வீரர்களுக்கிடையிலான 'தாச்சி' சுற்றுப் போட்டியில் பெண்கள்பிரிவில் முதலாம் இடத்தை, கைதடி மத்தி வளர்மதி மகளிர் விளையாட்டுக் கழகமும், ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சாவகச்சேரி சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

கைதடி நவ சனசமூக நிலையத்தினர் நடத்திய இத் தாச்சி சுற்றுப்போட்டிகளில் தென்மராட்சியில் 24 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன. மூன்று தினங்களாக தொடர்ந்து நடந்த இப் போட்டிகளில் இறுதியாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு: பெண்கள் பிரிவில் 2-ம் இடத்தைக் கைதடி மேற்கு சரஸ்வதி மகளிர் விளையாட்டுக்கழகமும், ஆண்கள் பிரிவில் 2-ம், 3-ம் இடங்களை முறையே கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழகமும், நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

★ இலங்கையில் இன்று தமிழர் மட்டுமென்றில்லை சிங்களவரும் அகதிகளாகும் நிலை

# தமிழர் தன்னம்பிக்கையுடன் இன்று வாழ்ந்து வருகின்றனர்

- தமிழகத்தில் தொண்டமான்

(சென்னை)

"இலங்கைத் தமிழர்கள் இப்போது தன்னம்பிக்கை பெற்றவர்களாகஇருக்கின்றனர்" என்று இலங்கை கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சென்னையில் நடைபெற்ற பாரத இலங்கை வர்த்தகர் கழகக் கூட்டத்தில் பேசுகையில் பெருமிதத்துடன் சொன்னார்.

"1958ம்வருடம் முதல்இலங்கை வாழ் தமிழர்கள் பல இன்னல்களுக்குட்பட்டே உள்ளனர். ஆயினும் தமிழர் மட்டுமே அகதிகளான முன்னைய நிலை மாறி சிங்களவரும் அகதிகளாகும் நிலை இன்று அங்கு ஏற்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார்.



இருநாடுகளும் பரஸ்பர நலனைக் கருத்தில் கொண்டு இணைந்து செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் அந்நிலை உருவாகுகையில் சிங்கப்பூரும்,மலேசியாவும் கூட அதனை முன்மாதிரியாகக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும் என்றும் குறிப்பிட்டார.

"இலங்கையில் அரசியல் சகஜ நிலை தோன்றாத போதிலும் தொழில்துறையில் சுமுகநிலை இருந்தே வருகிறது" என்றார் அவர்.

"பரஸ்பர நட்புறவினால் நன்மையும், அனுகூலமும் ஏற்படும்" என்றும் அவர் சொன்னார்.

மேற்படி கழகத் தலைவர் தனது உரையில், 'இலங்கைக்குச் செல்ல விமானத்தைத் தவிர வேறு மார்க்கமில்லாதுள்ளது. எனவே தொழில் துறை இதனால் பெரிதும் பாதிப்படைகிறது' என்று குறிப்பிட்டார்.

மொரோக்கோ- இஸ்ரேல் மேற்கொண்ட

# மேற்காசியப் பிரச்சினை பேச்சுக்கள் முறிந்தன

(றபாட்)

மேற்காசியப் பிரச்சினை குறித்து இஸ்ரேலியப் பிரதம மந்திரி பெரஸுடன் தான் நடத்திய பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் எதையும் காணமுடியவில்லை என்று மொரோக்கோ மன்னர் ஹஸன் கூறியுள்ளார்.

திரு. பெரஸுடன் அவர் இருநாட்களாகப்பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்கவேண்டும், அரபு பகுதிகளிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புக்களை வாபஸ் பெறவேண்டுமென்ற கோரிக்கைகளை திரு. பெரஸ் ஏற்க மறுத்ததாலேயே பேச்சுவார்த்தைகள் முறிந்தன என்று மன்னர் சொன்னார்.

பேச்சுவார்த்தை விபரங்களை ஏனைய அரபுநாடுகளின் தலைவர்களிடமும் தான் எடுத்துரைக்கப் போவதாகவும் சொன்னார் அவர்.

## பாரத-சீன எல்லைப்பிரச்சினை: பேச்சுக்கள் பீக்கிங்கில் முடிவின்றியே முடிந்தது

(பீக்கிங்)

பீங்கிங்கில் நடைபெற்ற பாரத-சீன அதிகாரிகள் மட்டத்திலான எல்லைப் பிரச்சினைப் பேச்சுவார்த்தைகள் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே முடிவுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்சினை தொடர்பான ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

இப் பேச்சுவார்த்தைகள் நட்புரீதியில் நடைபெற்ற போதிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டதாகக் கூறுவதற்கில்லை என்று சீனச் செய்தி ஸ்தாபனமான 'சின்வா' கூறியது.

தீவிரக்கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றதாக பீக்கிங்கிலிருந்து பி. ரி. ஐ. செய்திஸ்தாபனம் அறிவித்தது.

எல்லைப் பிரச்சினை பற்றி மட்டுமன்றி கலாச்சார, தொழில் நுட்ப உறவுகள் குறித்தும் அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டது.

பாரதக் குழுவுக்குத் தலைவராக வந்த வெளியுறவுச் செயலர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் சீனாவுக்கான பாரதத் தூதர் சகிதம் மந்திரி திரு. வான்கியைச் சந்தித்துச் சம்பாஷித்தார்.

சீனாவுடனான நட்புறவை வளர்த்துக் கொள்ளும் பாரதத்தின் விருப்பத்தை திரு. வெங்கடேஸ்வரன் அவரிடம் எடுத்துரைத்தார்.

ஆசியாவிலும், முழு உலகிலும் சமாதானத்தை ஏற்படுத்த உதவவேண்டியதன் தேவையை சீனப் பதில் பிரதம மந்திரி வற்புறுத்தினார்.

பாரதத்துடனான நட்பு நிலையை நன்கு புரிந்து கொள்ள பேச்சுவார்த்தைகள் உதவும் என்றார் அவர்.

## உப்பு உற்பத்தி தமிழகம் சாதனை

(சென்னை)

உப்பு உற்பத்தியில் பாரதத்திலேயே தமிழகம் இரண்டாவது இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருடத்தில் இங்கு பதினைந்து இலட்சத்து எழுபத்தோராயிரம் தொன் உப்பு உற்பத்தியாகிறது.

## மாணவர் வரவு குறைவு

(வேலணை)

மண்டைதீவுப் பகுதி பாடசாலைகள் இவ் வாரம் மீண்டும் ஆரம்பிக்கப் பட்ட போதும் மாணவர்கள் வரவின்றி வெறிச்சோடிக் கிடந்தது. வகுப்புகளுக்கு ஒரு சில மாணவர்களே வருகை தந்திருந்தனர். அண்மையில் இங்கு ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களினால் மேற்படி பாடசாலைகள் மூடப் பட்டிருந்தன.

மண்டைதீவுச் சந்தியில் உள்ள மினிமுகாம் ஆயுதப் படையினரால் மீண்டும் துன்பங்கள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக இப் பகுதி மக்கள் வெளியேறி அல்லைப் பிட்டி, குருநகர், போன்ற இடங்களுக்கு பெருந்தொகையாக இடம் பெயர்ந்துள்ளதனால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் மண்டைதீவில் நடந்த அனர்த்தங்களின் நினைவு இப்பகுதி மக்களதும், குழந்தைகளதும் மனதை விட்டு அகலாத சம்பவமாய் உள்ளதனால் இவர்கள் மீண்டும் மண்டைதீவிற்குச் செல்வதற்கு பயந்த நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

## ஆய்வுகூடம்

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்ப நிறுவனத்தின் குளிரூட்டல் தொழில்துறை மாணவர்களின் தொழில் நுட்பப் பயிற்சிகளை விஸ்தரிக்கும் நோக்குடன் புதிய ஆய்வுகூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஈழமுரசு

## கிளிநொச்சியில் 'ஹெலி' மூலம் துண்டுப் பிரசுர விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கிராமங்களைவிட்டு வெளியேறிய மக்களை மீண்டும்வந்து குடியிருக்குமாறு கோரும் இரண்டு துண்டுப் பிரசுரங்கள் இராணுவத்தினரால் கிளிநொச்சிப் பகுதிகளில் போடப்பட்டுள்ளது. ''ஆடு, மாடுகள் உங்கள் செல்வங்கள். அவற்றை வந்து பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை. ஆலயங்கள் பாழடைந்து கிடக்கின்றன. அவற்றைத் திறந்து ஒழுங்காக வழிபாடுகளை நடத்துங்கள்'' என்று இப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தொண்டமான் அறிவிப்பு:

# லெபனுன் மக்கள் வாழ்க்கை போன்று யாழ்ப்பாண மக்கள் வாழ்வு மாறியுள்ளது

(சென்னை)

''இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் திட்டவட்டமான முடிவுகளுடன் ஒருங்கிணைந்து பேச்சுவார்த்தைகளை நடத்தினுல் விரைவான முடிவு ஒன்று ஏற்படக்கூடும்'' என்று நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறினுர்.

லெபனுன் நாட்டில் இருப்பது போல யாழ்ப்பாண மக்கள் வாழ்க்கை நடத்தி வருவதாகவும் அமைச்சர் தொண்டமான் இங்கு சுட்டிக்காட்டினுர்.

''கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நல்ல இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது'' என்றும் சொன்னுர் அவர்.

இந்திய அரசு இலங்கை அரசிடமிருந்து உரிய விளக்கங்களையும் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் போராளிகள் குழுக்களுக்கும் அளித்தது சிறப்புக்குரியதாக இருந்தது. இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகாண வேண்டுமென இலங்கையில் உள்ள தமிழர்களும் சிங்களவர்களும் விரும்புகின்றனர் எனவும் அமைச்சர் மேலும் சொன்னுர்.

## உப்புவெளி தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேற்றம்

திருமலை — உப்புவெளிப் பகுதியில் கடந்த சில தினங்களாக ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் மேற்கொண்டுவரும் அட்டூழியங்கள் காரணமாக இப்பகுதயில் வசித்து வந்த பல தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

உப்புவெளியில் பல தமிழர்களின் வீடுகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து தப்பிவந்தவர்கள் தெரிவிக்கின்றுர்கள். படகுகள் மூலம் கடல் மார்க்கமாக உப்புவெளியைவிட்டு பல தமிழ்க் குடும்பங்கள் முல்லைத்தீவை வந்தடைந்த வண்ணமுள்ளனர்.

இவ்வாறு முல்லைத்தீவை வந்தடைந்தவர்களில் சிலர் யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

### தமிழர்...

மிடையே பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும், கட்சிகள் மாநாட்டின் தீர்மானங்கள் கூட்டணியினரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கபபட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து பிரமுகர்களும் நேற்று மாலை விமானத்தில் தமிழகம் திரும்பினர்.

### எமது எதிர்ப்பை...

மன்றி தனது சார்பு முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் வீழ்ச்சியையும் இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தைச் சிதைத்து மொத்தமாக இலங்கைக்குரிய போராட்டத்தைப் பின்தள்ளும் தனது தந்திரோபாயத்தையும் வெளிக்காட்டியது.

தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் இந்நிகழ்வு மிக முக்கியமானதாகவும், அவதானிக்கப்படவேண்டியதுமாகும். ஆகவே வெளிக்கடைச் சிறையிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசம் எங்கிலும் படுகொலை செய்யப்பட்ட தோழர்களையும் மக்களையும் நினைவு கூருமுகமாகவும் அவர்கள் சிந்திய குருதியில் தெறிந்த விடுதலைக் கனவுகளை நிதர்சனமாக்கவும், தொடர்ந்து எமது போராட்டத்தை வெற்றிவரை இட்டுச் செல்வதற்காக இன்றைய தினத்தை எதிர்ப்புத் தினமாகப் பிரகடனம் செய்து இந்நாளில் எமது எதிர்ப்பை எதிரிக்கு வெளிப்படுத்துவதோடு சர்வதேச நாடுகளின் பார்வைக்கும் இதை வெளிப்படுத்தி, எமது ஐக்கியத்தையும் உறுதியாய் நிலைநாட்டுவோம்.

### கடையில்...

யாத இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பணம் உட்பட வேறு பல பொருட்களையும் கொள்ளையடித்ததுடன் கடை உரிமையாளரான ராஜேந்திரன் என்பவரையும் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

செவ்வாய் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொள்ளையடிக்க வந்த இரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிள் ஒன்றிலேயே வந்ததாகவும் அவர்களில் ஒருவர் பிஸ்டலும், மற்றவர் கிறிஸ் கத்தியும் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தியாகிகளின்...

கொள்ள நாம் விலை மதிக்க முடியாத தியாகங்களை இன்னமும் செய்யமுடியாதுள்ளது. அக்கடமைகளை வகுத்துக் கொள்வதற்குப் பதிலாக இடையிடையே அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் எம்மை ஏய்க்காட்டும் விளையாட்டுப் பொம்மைகளில் அரைகுறைத் தீர்வுகளில் எமது கவனத்தைச் செலவிடுவது நீண்டகால அடிமைத்தனத்திற்கு அடிகோலியதாகவே அமையும்.

ஜூலை இனப்படுகொலையின் மூன்றுண்டு நிறைவை ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாய் நினைவுகூரும் இந்நாளில் எமது போராட்டத்தில் அதன் சாதக பாதக அம்சங்களைக் கவனத்திற் கொண்டு எமது வருங்காலப் பயணத்திற்கு அவ் அனுபவங்களைத் துணையாக்கிக் கொள்ள வேண்டியதும் அனைவரதும் கடமையாகும்'' என இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் இன்று மக்கள் எழுச்சி ஊர்வலம்

(கிளிநொச்சி)

இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் பங்குகொள்ளும் மாபெரும் எழுச்சி ஊர்வலம் நடைபெறும். அரச பயங்கரவாதத்தினுல் கிளிநொச்சியில் தொடர்ச்சியாக பொதுமக்கள் கொலை செய்யப்படுவதை கண்டித்தும் மாகாணசபையை எதிர்த்தும் இவ்வூர்வலம் நடத்தப்படும்.

வன்னேரிக்குளத்திலிருந்து புறப்படும் ஊர்வலம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கோணுவில் உருத்திரபுரம், ஆரும் வாய்க்கால் வழியாக பரந்தன் சென்று முரசுமோட்டையை அடையும். இரணைமடு, விவேகானந்தநகர், செல்வாநகர், கனகாம்பிகைக் குளம் ஆகிய இடங்களிலிருந்து புறப்படும் ஊர்வலம் கனகாம்பிகை அம்மன் கோவிலை அடைந்து பின் திருவையாறு ஊடாக முரசுமோட்டையை அடையும். இராமநாதபுரம் வட்டக்கச்சி. பெரியகுளம், புளியம்பொக்கணை ஆகிய இடங்களிலிருந்து புறப்படும் ஊர்வலம் நேராக முரசுமோட்டையை அடையும்.

பிரபந்தனுறு, விசுவமடு, தருமபுரம் ஆகிய இடங்களிலிருந்தும் ஊர்வலம் முரசுமோட்டைக்கு வரும். பின்னர் முரசுமோட்டை மைதானத்தில் கூட்டமும் இடம்பெறும். கிளிநொச்சிப் பகுதியில் உள்ள எல்லா வாகனங்களும் இவ்வூர்வலத்தில் பங்குபற்றும்.

## கடலில்தத்தளித்தபயணிகளை மீனவர்கள் காப்பாற்றினர்

(வண்ணுர்பண்ணை)

அல்லைப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக படகில் பிரயாணம் செய்த சுமார் இருபது பயணிகள் கடலில் கவிழ்ந்தனர். இவர்களில் பெண்களும் அடங்குவர்.

நேற்று முன்தினம் காலை யாழ்நகர் வருவதற்காக படகில் பயணிகள் ஏறிக்கொண்டனர். படகு நாவாந்துறைக் கரைக்கு திசை திருப்பப்பட்ட போது கடலில் திடீரென ஏற்பட்ட சுழியினுல் படகு கவிழ்ந்தது. நாவாந்துறை சென். மேரிஸ் மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது படகில் பிரயாணம் செய்த பயணிகள் நீரில் மூழ்கிய வண்ணமிருந்ததைக் கண்டு விரைந்து சென்று பயணிகளைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

பயணிகளின் பொருட்களும், அடையாள அட்டைகளும் கடலில் அடித்துச் செல்லப்பட்டன. காப்பாற்றிய மீனவர்களுக்கு பிரயாணிகளும், சென். மேரிஸ் கடல்தொழில் விரிவாக்க சேவா சங்கத்தினரும் நன்றி கூறினுர்கள்.

### பரீட்சை உத்தியோகத்தர் கருத்தரங்கு

இம்முறை நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் கடமையாற்றவுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் இருபத்தியேழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கும், பத்து மணிக்கும் இரு கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை தவருது கலந்து கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுக்கொவகிறது.

### தொண்டமான்...

துப் பேசவிருப்பதாக அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

போராளிகள் குழுக்களுடன் பிரதமர் பேசி அவர்களுடன் தீர்வுக்கான இணக்க முடிவொன்றைப் பெற வேண்டுமென்று தாம் ராஜீவ் காந்தியைச் சந்திக்கும் போது கேட்க விருப்பதாகவும்தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

### மின் கம்ப தண்டனை

(முல்லைத்தீவு)

கொள்ளை தொடர்பாக விசாரணை செய்யப்பட்ட சி. கணபதிப்பிள்ளை என்பவருக்கு மின் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்ட தண்டனை 'புளொட்' இயக்கத்தால்வழங்கப்பட்டது. இது தண்ணீரூற்று பகுதியில் இடம்பெற்றது.

துப்பாக்கி ஒன்று திருடப்பட்டது தொடர்பாக இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது.

### பொதிகள் ..

சல்கள் காணப்பட்டால் பொலிசாருக்கு அறிவிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் டிப்போக்களின் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள உத்தரவில் பஸ்ஸில் கொண்டு செல்ல பொதிகள் எதனையும் ஏற்கக் கூடாதென்று கூறப்பட்டுள்ளது.

### மாகாணசபை...

கேட்ட திருமதி பண்டாரநாயக்கா, அரசாங்கத்தின் உள்ளேயே பலர் இதனை வன்மையாக எதிர்க்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினுர். சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, ஜனுப் ஹலீம் இஷாக் ஆகியோரும் இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

### இன்று பஸ்சேவைகள் நடைபெருது

இன்றைய ஹர்த்தாலையொட்டி இன்று உள்ளூர், வெளியூர் பஸ்சேவைகள் எதுவும் நடைபெறமாட்டாதென வடபிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. இன்று தனியார் மினி பஸ்சேவைகளும் நடைபெறமாட்டாது.

### பரீட்சை மண்டபம் மாற்றம்

முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சை நடைபெறும் சில பரீட்சை மண்டபங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடமாநில கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி வட இந்து மகளிர் கல்லூரி மண்டபம் ஒன்று, இரண்டு ஆகியன அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. வட இந்து மகளிர் கல்லூரி பரீட்சை மண்டபம் மூன்று, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பெண்கள் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

### கோட்டையினர் வழமைபோல

நேற்று பகல் பதினெருமணி போல் கோட்டையிலிருந்து பரவலாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. கடற்கரைப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இத் துப்பாக்கிப்பிரயோகத்தையடுத்து போராளிகள் உஷார் நிலையையடைந்தனர். நேற்றிரவும் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றது.

### நஞ்சூட்டி கொலை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து பல மக்கள் குடிபெயர்ந்துள்ளதால், அவர்கள் வளர்த்த நாய்கள் பல அநாதரவாக விடப்பட்டுள்ளன.

வீடுகளில் மக்கள் இல்லாததால் பல நாய்கள் சாப்பாடின்றி, அலைந்து விசர்பற்றும் நிலைக்குள்ளாவதால் இளைஞர்களால் பல நாய்கள் நஞ்சூட்டப்பட்டு கொலை செய்யப்படுகின்றன.

மக்கள் நலன் கருதியும், நாய்களின் நலன் கருதியும் இச்செயல்கள் செய்யப்படுகின்றன.

### ஆதரவு

இன்று நடைபெறும் எதிர்ப்புத் தினத்தை, எம் மத்தியிலுள்ள வேறுபாடுகள், பேதங்களை மறந்து கடையடைப்பு தினமாகவும், உலகிற்கு எடுத்துக் காட்டான தினமாகவும் அனைவரும் அனுஷ்டிக்குமாறு யாழ். நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு சமூக அபிவிருத்திச்சபை கேட்டுக்கொண்டுள்ளது.

### மாமடுவ சாரதி யாழ். ஆஸ்பத்திரியில்

(வண்ணுர்பண்ணை)

கடந்த செவ்வாய்க்கிழமை மாமடுவவில் ஏற்பட்டகண்ணி வெடியால் சிக்குண்ட குறிப்பிட்ட பஸ் சாரதியான மீசாலையைச் சேர்ந்த எம். செல்லத்துரை (35) நேற்று அநுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து யாழ். அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் விதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 25-07-1986 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437